# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/42 - 2018 ජනවාරි මස 12 වැනි සිකුරාදා - 2018.01.12

*2053/42 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

*பிரிவு 4(2) இன் கீழான பிரசுரிப்பு*

*இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதனகத்துப்பின்னர் ''நிறுவகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள* 'SLFRS *9 நியமத்துக்கான திருத்தங்கள் - எதிர்மறை இழப்பீடுகளுடன் சேர்ந்த முற்கொடுப்பனவு அம்சங்களானது' இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் பன்னிரன்டாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளை உள்ளடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றன. முற்காலப் பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*பேரவையின் கட்டளைப்படி,*

*அருண அல்விஸ்,*
*செயலாளர்.*

*இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,*
*இல: 30* A,
*மலலசேகர மாவத்தை,*
*கொழும்பு 07.*
*2018, சனவரி 12 ஆந் திகதி*




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## SLFRS 9 நியமத்துக்கான திருத்தங்கள் - எதிர்மறை இழப்பீடுகளுடன் சேர்ந்த முற்கொடுப்பனவு அம்சங்கள்

பந்தி 7.1.7 சேர்க்கப்பட்டுள்ளது. புதிய தலையங்கம் மற்றும் பந்திகள் 7.2.29 – 7.2.34 சேர்க்கப்பபட்டுள்ளன.

**அத்தியாயம் 7 நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை**

**7.1 நடைமுறைக்கு வரும் திகதி**

…

7.1.7 2017 டிசம்பரில் வழங்கப்பட்ட *எதிர்மறை இழப்பீடுகளுடன் சேர்ந்த முற்கொடுப்பனவு அம்சங்கள்* (SLFRS 9 நியமத்துக்கான திருத்தங்கள்) சேர்க்கப்பட்ட பந்தி 7.2.29-7.2.34 மற்றும் B4.1.12A , அத்துடன் திருத்தப்பட்ட பந்திகள் B4.1.11(b) மற்றும் B4.1.12(b) ஆகியவையாகும். உரிமம் ஒன்று இத் திருத்தங்களை 01 சனவரி 2019 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக் காலங்களுக்குப் பிரயோகிக்கும். முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் ஒன்று இத் திருத்தங்களை முன்னைய காலங்களுக்குப் பிரயோகித்தால், அந்த விடயம் வெளிப்படுத்தப்படும்.

**7.2 இடைக்கால ஏற்பாடுகள்**

…

***எதிர்மறை இழப்பீடுகளுடன் சேர்ந்த முற்கொடுப்பனவு அம்சங்களுக்கான இடைக்கால ஏற்பாடு***

7.2.29 *எதிர்மறை இழப்பீடுகளுடன் சேர்ந்த முற்கொடுப்பனவு அம்சங்கள்* (SLFRS 9 நியமத்துக்கான திருத்தங்கள்) இனை ஓர் உரிமம் LKAS 8 நியமத்துக்கு இணக்கமான வகையில், பந்திகள் 7.2.30–7.2.34 இல் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வேளைகளில் முற்காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும்.

7.2.30 இத் திருத்தங்களை முதன்முதலாகப் பிரயோகிக்கும் அதேவேளை இந்த நியமத்தினையும் முதன்முதலாகப் பின்பற்றும் உரிமம் பந்திகள் 7.2.31–7.2.34 க்குப் பதிலாக பந்திகள் 7.2.1–7.2.28 இனையே பிரயோகிக்கும்.

7.2.31 இந்த நியமத்தினை முன்னரே பின்பற்றி, இத் திருத்தங்களை முதன்முதலாகப் பிரயோகிக்கும் உரிமம் ஒன்று பந்திகள் 7.2.32–7.2.34 இனைப் பிரயோகிக்கும். உரிமம் இத் திருத்தங்களுக்கு அவசியமான இந்த நியமத்திலுள்ள ஏனைய அவசியமான தேவைப்பாடுகளையும் பிரயோகிக்கும். அந்த நோக்கத்திற்காக, முதன்முறைப் பிரயோகத்துக்கான திகதி தொடர்பான குறிப்புரைகள் யாவும் உரிமம் இந்த நியமங்களைப் பின்பற்ற ஆரம்பிக்கும் அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பம் (இத் திருத்தங்களின் ஆரம்பப் பின்பற்றுகைத் திகதி) என வாசிக்கப்படுதல் வேண்டும்.

7.2.32 இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிச் சொத்து அல்லது நிதிப் பரிப்பு ஒன்றினைக் குறித்து ஒதுக்குதல் தொடர்பாக, உரிமம் ஒன்று:

(a) முன்னைய காலங்களில் இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிச் சொத்து ஒன்றினைக் வகைப்படுத்துவதானது பந்தி 4.1.5. இல் குறிப்பிடப்பட்ட கட்டுறுப்புக்களுக்கு இணக்கமான வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்து, ஆனால் இப் புதிய திருத்தங்களைப் பிரயோகிப்பதன் காரணமாக அத்தகைய கட்டுறுப்புக்கள் இனிமேலும் திருப்திசெய்யப்பட முடியாதவிடத்து, அத்தகைய முன்னைய கால வகைப்படுத்தலை இரத்துச் செய்யும்.

(b) இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிச் சொத்து ஒன்றினைக் வகைப்படுத்தல் தொடர்புபட்ட முன்னைய கையாள்கை பந்தி 4.1.5. இல் குறிப்பிடப்பட்ட கட்டுறுப்புக்களைத் திருப்தி செய்யாதிருந்து, ஆனால் இப் புதிய திருத்தங்களைப்

பிரயோகிப்பதன் காரணமாக அத்தகைய கட்டுறுப்புக்கள் இனிமேல் திருப்தி செய்யப்படத்தக்கதாக உள்ள போது, அவ்வாறு வகைப்படுத்தலை மேற்கொள்ளும்.

(c) முன்னைய காலங்களில் இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிச் சொத்து ஒன்றினைக் குறித்து ஒதுக்கியமையானது பந்தி 4.2.2(a) இல் குறிப்பிடப்பட்ட கட்டுறுப்புக்களுக்கு இணக்கமான வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்து, ஆனால் இப் புதிய திருத்தங்களைப் பிரயோகிப்பதன் காரணமாக அத்தகைய கட்டுறுப்புக்கள் இனிமேலும் திருப்தி செய்யப்பட முடியாதவிடத்து, அத்தகைய முன்னைய கால வகைப்படுத்தலை இரத்துச் செய்யும். அத்துடன்,

(d) இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிச் சொத்து ஒன்றினைக் வகைப்படுததல் தொடர்புபட்ட முன்னைய கையாள்கை பந்தி 4.2.2(a) இல் குறிப்பிடப்பட்ட கட்டுறுப்புக்களைத் திருப்தி செய்யாதிருந்து, ஆனால் இப் புதிய திருத்தங்களைப் பிரயோகிப்பதன் காரணமாக அத்தகைய கட்டுறுப்புக்கள் இனிமேல் திருப்தி செய்யப்படத்தக்கதாக உள்ள போது, வகைப்படுத்தலை மேற்கொள்ளும்.

அவ்வாறானதொரு வகைப்படுத்தல் மற்றும் இரத்துச் செய்தலானது அந்தத் திருத்தங்களின் ஆரம்பப் பிரயோகத் திகதியில் காணப்படுகின்ற விடயங்கள் மற்றும் நிலைமைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். இந்த வகைப்படுத்தல் முற்காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் விளைவுள்ள வகையில் பிரயோகிக்கப்படும்.

7.2.33 இந்த திருத்தங்களின் பிரயோகத்தை பிரதிபலிக்கும் வகையில் உரிமம் முன்னயை காலங்களுக்குக்காக மீள்கூற்று செய்ய வேண்டித் தேவைப்படாது. முற்கால நிதிக்கூற்றுக்களில் மாற்றத்தை ஏற்படுத்தாது, இந்த நியமத்திலுள்ள அனைத்து தேவைகளையும் நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிக்கத்தக்கதாக இருத்தல் சாத்தியமானால் மட்டுமே உரிமம் மீள்கூற்று செய்யலாம். உரிமம் முன்னைய காலங்களுக்காக மீள்கூற்று செய்யவில்லை என்றால், முன்னயை கால கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் ஆரம்ப பகிரப்படாத உழைப்புக்களின் மீது (அல்லது பொருத்தமான வகையில், உரிமத்தின் மற்றொரு ஆக்கக்கூறு மீது) இந்த திருத்தங்கள் முதன்முதலாகப் பிரயோகிக்கப்படும் அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ள கொண்டு செல்லல் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை இந்த திருத்தங்கள் முதன்முதலாகப் பிரயோகிக்கப்படும் அறிக்கையிடல் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்தல் வேண்டும்.

7.2.34 இந்த திருத்தங்கள் முதன்முதலாகப் பிரயோகிக்கப்படும் அறிக்கையிடல் காலப்பகுதியில், முதன்முறைப் பிரயோகத் திகதியில் உள்ளவாறு இந்த திருத்தங்களால் தாக்கமடைந்துள்ள ஒவ்வொரு நிதி சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்களுக்கும் பின்வரும் தகவல்களை வெளியிடப்படுத்தும்:

(a) இந்த திருத்தங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட முந்தைய அளவீட்டு வகை மற்றும் கொண்டு செல்லல் தொகை

(b) இந்த திருத்தங்களைப் பயன்படுத்திய பின்னர் நிர்ணயிக்கப்பட்டுள்ள புதிய அளவீட்டு வகை மற்றும் கொண்டு செல்லல் தொகை

(c) முன்னர் நிதிநிலைமைக் கூற்றில் இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் வகைப்படுத்தப்பட்டு, இனிமேல் அவ்வாறு வகைப்படுத்தப்படாத நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப் பரிப்புக்களின் கொண்டு செல்லல் பெறுமதி, மற்றும்

(d) இலாபம் நட்டங்கள் ஊடாக சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துகள் அல்லது நிதிப் பரிப்புக்களின் வகைப்படுத்தல் அல்லது வகைப்படுத்தல் நீக்கல் ஆகியவற்றுக்கான காரணங்கள்.

பின்னிணைப்பு B இல், பந்தி 4.1.11 (b) மற்றும் B4.1.12 (b) ஆகியன திருத்தப்பட்டுள்ளன. பந்தி B4.1.12A சேர்க்கப்பட்டுள்ளது. பந்தி திருத்தப்படவில்லை, ஆனால் வகப்படுத்தலின் எளிமைத் தன்மைக்காக உள்ளடக்கப்பட்டுள்ளது. புதிய உரை அடிக்கோடிடப்பட்டுள்ளதுடன், நீக்கப்பட்ட உரை வெட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**வகைப்படுத்தல் (அத்தியாயம் 4)**

**நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் (பிரிவு 4.1)**

…

**மூலத் தொகை மற்றும் நிலுவையிலுள்ள மூலத் தொகை மீதான வட்டிக் கொடுப்பனவு மாத்திரம் உள்ளடங்கிய ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள்**

…

*ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் கால அளவு அல்லது தொகையை மாற்றத்தக்க ஒப்பந்தப் பதங்கள்*

B4.1.10 நிதிச் சொத்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் கால அளவு அல்லது தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒப்பந்தப் பதத்தினைக் கொண்டிருந்தால் (உதாரணமாக, சொத்து முதிர்வுத் தன்மைக்கு முன்பாகவே செலுத்தத் தக்கதாகக் காணப்பட்டால் அல்லது அதன் காலம் நீடிக்கத்தக்கதாக இருந்தால்), குறித்த சாதனத்தின் ஆயுட் காலமீறாக ஏற்படத்தக்க ஒப்பந்தக் காசுப் பாய்ச்சலானது அசல் தொகை மற்றும் நிலுவையிலுள்ள அசல் தொகை மீதான வட்டி மாத்திரமா என்பதை நிர்ணயித்தல் வேண்டும். இந்த நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக, உரிமம் ஒப்பந்தப் பதங்களின் மாற்றத்துக்கு முன்னர் மற்றும் மாற்றத்துக்குப் பின்னர் ஏற்படத்தக்க ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் இரண்டையுமே மதிப்பீடு செய்தல் வேண்டும். மேலும் உரிமம் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் கால அளவு அல்லது தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் உறுமுரிமை நிகழ்வுகளின் (தூண்டுதல்) இயல்பினை மதிப்பீடு செய்தல் வேண்டும். ஒப்பந்தக் காசுப் பாய்ச்சலானது அசல் தொகை மற்றும் நிலுவையிலுள்ள அசல் தொகை மீதான வட்டி மாத்திரமா என்பதை நிர்ணயிப்பதற்கு உறுமுரிமை நிகழ்வுகளின் இயல்பு மாத்திரம் போதுமான காரணியாக இல்லாத போது, அது ஒரு குறிகாட்டியாக இருக்கக்கூடும். உதாரணமாக, கடன்படுனர் நிதிச் சாதனம் ஒன்றுக்கான குறித்த எண்ணிக்கையிலான கொடுப்பனவுகளைத் தவறும் போது, உயர்ந்த வீதத்துக்கு அமைக்கத்தக்க வட்டி வீதத்துடன் கூடிய நிதிச் சாதனம் ஒன்றினை, குறித்த உரிமையாண்மை குறிகாட்டியானது குறிப்பிட்ட மட்டம் ஒன்றை அடைந்தால் உயர்ந்த மட்டத்தில் மீளமைக்கத்தக்க வட்டி வீதம் ஒன்றுடன் ஒப்பிடுக. முதலாவது நிலைமையில், தவறவிடப்பட்ட கொடுப்பனவு மற்றும் அதிகரித்த கடன் இடர் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு காரணமாக, சாதனத்தின் ஆயுளீறான ஒப்பந்தக் காசுப் பாய்ச்சலானது முழுமையாக அசல் தொகை மற்றும் நிலுவையிலுள்ள அசல் தொகை மீதான வட்டி மாத்திரமாக இருப்பதற்கான சாத்தியமானது அதிகமாகும். (பந்தி B4.1.18 இனையும் பார்வையிடுக).

B4.1.11 அசல் தொகை மற்றும் நிலுவையிலுள்ள அசல் தொகை மீதான வட்டி மாத்திரமான ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை ஏற்படுத்தக் கூடிய ஒப்பந்தப் பதங்களுக்கு பின்வருவன உதாரணங்களாகும்.

(a) பணத்துக்கான காலப் பெறுமதி மீதான கவனத்தைக் கொண்ட மாறும் வட்டி வீதம், குறித்த காலப்பகுதி ஒன்றில் நிலுவையிலுள்ள அசல் தொகை மீது தொடர்புபட்ட கடன் இடர் (கடன் இடருக்கான கைமானமானது ஆரம்ப ஏற்பிசைவில் மாத்திரம் நிர்ணயிக்கப்பட்டு, அவ்வாறே நிலையாக்கப்படலாம்) மற்றும் ஏனைய எளிமையான கடன்படுகை இடர்கள், அத்துடன் ஓர் இலாப எல்லை

(b) முன்கூட்டியே கடன் பத்திரத்தை செலுத்தித் தீர்ப்பதற்கு வழங்குபவரை (அதாவது கடன்பட்டோர்) அனுமதிக்கும் அல்லது கடன் சாதனம் ஒன்றை அதன் முதிர்வுக்கு முன்னரே அதனை வழங்கியவருக்கு தருவதற்கு வைத்திருப்போனை (அதாவது, கடன் கொடுனரை) அனுமதிக்கும் ஒப்பந்தப் பதங்கள் மற்றும் முற்கொடுப்பனவுத் தொகையானது கணிசமான அளவில் அசல் தொகையின் செலுத்தப்படாத தொகை மற்றும் நிலுவையிலுள்ள அசல் ~~மீதான~~ வட்டி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும். இது ஒப்பந்தத்தின் நேரகாலத்துடனான முடிப்பிற்கான நியாயமான மேலதிக நட்ட ஈட்டை உள்ளடக்கலாம்.

(c) முன்கூட்டியே கடன் பத்திரத்தை செலுத்தித் தீர்ப்பதற்கு வழங்குபவரையோ அல்லது வைத்திருப்போனையோ கடன் சாதனம் ஒன்றின் ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்க அனுமதிக்கும் (அதாவது ஓர் நீட்டிப்புத் தெரிவு) அத்துடன் நீட்டிப்புத் தெரிவுக்கான நிபந்தனைகள் நீட்டிப்புக் காலத்தில் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் அசல் தொகையின்

செலுத்தப்படாத தொகை மற்றும் நிலுவையிலுள்ள அசல் மீதான வட்டி ஆகியவற்றை மாத்திரம் கொண்டதாக அமையத்தக்க ஒப்பந்தப் பதங்கள். இது ஒப்பந்தத்தின் நேரகாலத்துடனான முடிப்பிற்கான நியாயமான மேலதிக நட்ட ஈட்டை உள்ளடக்கலாம்.

B4.1.12 B4.1.10 பந்தியினைக் கருத்தில் கொள்ளாது, 4.1.2(b) மற்றும் 4.1.2A(b) பந்தியிலுள்ள கட்டுறுப்புக்களை சாதாரணமாகத் திருப்தி செய்திருக்கக் கூடிய, ஆனால் வழங்குபவரை ஒரு கடன் சாதனத்தை முன்கூட்டியே செலுத்தித் தீர்க்க அனுமதிக்கும் (அல்லது தேவைப்படுத்தும்) அல்லது வைத்திருப்பவரை கடன் பத்திரம் ஒன்றை அதன் முதிர்வுக்கு முன்பாகவே மீளவும் அதனை வழங்கியவருக்கே தர அனுமதிக்கும் ஒப்பந்தப் பதங்கள் காரணமாக அதனைத் திருப்தி செய்யாத நிதிச் சொத்து ஒன்று பின்வரும் நிலைமைகளில் காலத் தேய்விடப்பட்ட பெறுமதியில் அல்லது ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடாக சீர்மதிப்பில் அளவிடப்படத் தகமை வாய்ந்தவையாகும் (பந்தி 4.1.2(a) அல்லது 4.1.2(a) இல் உள்ள கட்டுறுப்பினைத் திருப்தி செய்யும் அடிப்படையில்)

(a) உரிமம் நிதிச் சொத்தினை ஒப்பந்த முகப் பெறுமதியில் ஒரு வட்டத்துடன் அல்லது கழிவுடன் கையகப்படுத்தல் அல்லது உருவாக்கல்

(b) முற்கொடுப்பனவானது கணிசமான அளவில் ஒப்பந்தத்தின் முகப் பெறுமதி மற்றும் நிலுவையாகவுள்ள (ஆனால் செலுத்தப்படாத) நேரகாலத்துடனான ஒப்பந்த முடிப்புக்கான நியாயமான மேலதிக நட்ட ஈட்டுத் தொகை உள்ளடங்கிய ஒப்பந்த வட்டி ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருத்தல்.

(c) உரிமம் நிதிச் சொத்தை முதன்முதலான ஏற்பிசைவு செய்யும் போது, முற்பொடுப்பனவு அம்சத்தின் சீர்மதிப்பு முக்கியத்துவமற்றதாகும்.

B4.1.12A பந்திகள் B4.1.11(a) மற்றும் B4.1.11(b) யைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக, ஒப்பந்தத்தின் நேரகாலத்துடனான முறிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வு அல்லது சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாது, ஒரு தரப்பு அத்தகைய நேரகாலத்துடனான ஒப்பந்த முடிப்பிற்காக நட்ட ஈட்டை வழங்கும் அல்லது பெற்றுக் கொள்ளும். உதாரணமாக, ஒரு தரப்பு ஒப்பந்தத்தை நேர காலத்துடனேயே முடிப்பதற்காக (அல்லாதவிடத்து, நேரகாலத்துடனான முடிப்பை ஏற்படுத்துவதற்காக) நட்ட ஈட்டினை வழங்கலாம் அல்லது பெற்றுக் கொள்ளலாம்.

**LKAS 28 துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகள் மீதான நீண்டகால அக்கறைகள் நியமத்துக்கான திருத்தங்கள்**

பந்திகள் 14A மற்றும் 45G–45K ஆகியன சேர்க்கப்பட்டுள்ளதுடன் பந்தி 41 நீக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரைகள் வெட்டிக் காட்டப்பட்டுள்ளன.

**உரிமையாண்மை முறை**

14A உரிமம் துணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலுள்ள உரிமையாண்மை முறை பிரயோகிக்கப்படாத ஏனைய நிதி சாதனங்களுக்கும் நியமத்தைப் பிரயோகிக்கும். இவை கருத்து அடிப்படையில் உரிமத்தின் துணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலுள்ள நிகர முதலீட்டை உருவாக்கும் நீண்டகால அக்கறைகளை உள்ளடக்கும் (பந்தி 38 இனைப் பார்வையிடுக). இந்த நியமத்தின் பந்திகள் 40–43 இனைப் பிரயோகிக்க முன்னர் உரிமம் அத்தகைய அக்கறைகளுக்கு SLFRS 9 நியமத்தினைப் பிரயோகிக்கும். SLFRS 9 நியமத்தைப் பிரயோகிக்கும் போது, உரிமம் இந் நியமத்தைப் பிரயோகிப்பதில் நீண்டகால அக்கறைகளின் கொண்டு செல்லல் பெறுமதியில் ஏற்படத்தக்க சீராக்கங்களைக் கருத்தில் எடுப்பதில்லை.

**உரிமையாண்மை முறையின் பிரயோகம்**

…

41 [நீக்கப்பட்டுள்ளது] ~~உரிமம் SLFRS 9 நியமத்திலுள்ள சேத இழப்புத் தேவைப்பாடுகளை SLFRS 9 நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஆனால் தேறிய முதலீட்டின் பகுதிகளைக் கொண்டிராத துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகள் மீதான அக்கறைகளுக்குப் பிரயோகிக்கும்~~

…

## நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் இடைக்கால ஏற்பாடு

…

45G 2017 டிசம்பரில் வழங்கப்பட்ட *துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகள் மீதான நீண்டகால அக்கறைகள் நியமத்துக்கான திருத்தங்கள்* சேர்க்கப்பட்ட பந்தி 14A, அத்துடன் நீக்கப்பட்ட பந்தி 41. ஓர் உரிமம் LKAS 8 நியமத்துக்கு இணக்கமான வகையில், பந்திகள் 45H–45K இல் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வேளைகளில் முன்பிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் பிரயோகிக்கும். முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் ஒன்று இத் திருத்தங்களை முன்னைய காலங்களுக்குப் பிரயோகித்தால், அந்த விடயம் வெளிப்படுத்தப்படும்.

45H பந்தி 45G இல் உள்ள திருத்தங்களை முதன்முறையாகப் பிரயோகிக்கும் அதேவேளை SLFRS 9 நியமத்தையும் பின்பற்றும் உரிமம் ஒன்று SLFRS 9 நியமத்தின் இடைக்கால ஏற்பாட்டுத் தேவைப்பாடுகளை பந்தி 14A இல் விபரிக்கப்பட்டுள்ள நீண்டகால அக்கறைகளுக்குப் பிரயோகித்தல் வேண்டும்.

45I SLFRS 9 நியமத்தினை முதன்முறை பின்பற்றிய பின், பந்தி 45G இல் உள்ள திருத்தங்களை முதன்முறையாகப் பிரயோகிக்கும் உரிமம் ஒன்று SLFRS 9 நியமத்தின் இடைக்கால ஏற்பாட்டுத் தேவைப்பாடுகளை பந்தி 14A இல் விபரிக்கப்பட்டுள்ள நீண்டகால அக்கறைகளுக்குப் பிரயோகித்தல் வேண்டும். இந்த நோக்கங்களுக்காக, SLFRS 9 நியமத்தின் முதன்முறைப் பிரயோகம் தொடர்பான திகதிகள் யாவும் உரிமம் இத் திருத்தங்களை முதன்முறையாகப் பிரயோகிக்கும் ஆண்டுக் காலப் பகுதியின் ஆரம்பம் (திருத்தங்களின் முதன்முறைப் பிரயோகத் திகதி) என வாசிக்கப்படுதல் வேண்டும். திருத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் உரிமம் முற்காலங்களை மீள்கூற்று செய்யுமாறு தேவைப்படுத்தப்படவில்லை. முற்கால நிதிக்கூற்றுக்களில் மாற்றத்தை ஏற்படுத்தாது, இந்த நியமத்திலுள்ள அனைத்து தேவைகளையும் நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிக்கத்தக்கதாக இருத்தல் சாத்தியமானால் மட்டுமே உரிமம் மீள்கூற்று செய்யலாம்.

45J SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்* நியமத்தின் படியாக SLFRS 9 நியமத்திலிருந்து விலக்களிப்புப் பெறும் உரிமம் ஒன்று பந்தி 45G இலுள்ள திருத்தங்களை முதன்முறையாக பிரயோகிக்கும் போது, இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் முன்னைய காலங்களுக்கு மீள்கூற்று செய்யுமாறு தேவைப்படுத்தப்படவில்லை. முற்கால நிதிக்கூற்றுக்களில் மாற்றத்தை ஏற்படுத்தாது, இந்த நியமத்திலுள்ள அனைத்து தேவைகளையும் நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிக்கத்தக்கதாக இருத்தல் சாத்தியமானால் மட்டுமே உரிமம் மீள்கூற்று செய்யலாம்.

45K பந்திகள் 45I மற்றும் 45J இனைப் பிரயோகித்து உரிமம் முன்னைய காலங்களை மீள்கூற்று செய்யாதவிடத்து, இந்த திருத்தங்களின் முதன்முறைப் பிரயோகத் திகதியில் அது பின்வருவனவற்றுக்கு இடையிலான ஏதேனும் வேறுபாடுகளை ஆரம்ப கைக்கொள் இலாபத்தின் மீது (அல்லது பொருத்தமானதோர் உரிமையாண்மையின் ஆக்கக் கூறின் மீது ஏற்பிசைவு செய்யும்:

(a) பந்தி 14A யில் விபரிக்கப்பட்டவாறு அத் திகதியில் உள்ளவாறான நீண்டகால அக்கறைகளின் முன்னைய கொண்டு செல்லல் பெறுமதி, மற்றும்

(b) நீண்டகால அக்கறைகளின் அத் திகதியிலான கொண்டு செல்லல் பெறுமதி



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.